உ

சிவமயம்.

# சைவப்பிரகாசிகை

## முதற் புத்தகம்.

அச்சுவேலி

சரசுவதிவித்தியாசாலை அதிபர்

ஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்

அவர்களால் எழுதப்பட்டு,

ஷைவித்தியாசாலை

ஆசிரிய சங்கத்தாரால்

பருத்தித்துறை

சரஸ்வதியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பவ௵—தைமீ

1935.

உ
சிவமயம்.

# மதிப்புரை.

வேதாகம சைவசித்தாந்தசபையின்
உபந்நியாசகரும்,
மானிப்பாய்
இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியரும் ஆகிய
ஸ்ரீமான். வீ. வீரசிங்கம் B. A. (Lond.)
அவர்கள் எழுதியது.

ஒருதேசத்தின் கலைவளர்ச்சிக்கு அத்தேசத்தின் சரித்திரங்கள் இன்றியமையாக்கருவி. சைவநாடாகிய தமிழ்நாட்டின் கலைவளமும் உணர்வும் சைவச்சரித்திர உணர்ச்சியில்லாதவிடத்துப் பொருந்தல் அபூர்வம். சூரன்போர், மாம்பு முதலிய விழாக்களைப்பார்த்தும் அவ்விழாக்களின் தாற்பரியந்தெரியாத தமிழரகத்துத் தமிழ்க்கலைதோன்றுது.

தமிழ்க்கலை தலைகாட்டத் தொடங்குமிக்காலத்து, சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்இயற்றிய சைவப்பிரகாசிகைஎன்னும் மகுடம்பூண்டு ஒவ்வோர்வகுப்புக்கும் எற்றபாஷையும் பொருளையுங்கொண்ட புஸ்தகங்கள் சைவக்கலை வளர்ச்சிக்குரியன.

இச்சைவப்பிரகாசிகை முதற்புத்தகம் இலேசான பாஷையில், சிறுகதைகளாகச் சைவசமயப்பாலர்க்கு உவப்ப எழுதப்பட்டிருக்கின்றது. இப்புஸ்தகம்சைவசமயக்கல்விக்கு அஸ்திபாரம் போன்றது. சைவவித்தியாசாலைகளில் சமய பாடப்புத்தகமாகப் பயிலத்தக்கது.

சைவம் பிரகாசிக்க.

பவ ஞு
தைமீ கஉ

வீ. வீரசிங்கம்,
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

உ

கணபதி துணை.

# சைவப்பிரகாசிகை

## முதற் புத்தகம்.



### க- விநாயகக்கடவுள்.

இந்திரன் என்பவன் தேவர்களுக்குத் தலைவன். அவன் பூமியிலே உள்ள சீகாழியில் வந்திருந்தான். அங்கே இருந்து சிவபூசை செய்வதற்காகப் பூமரங்களை உண்டுபண்ணினான்.

அவை மழை இல்லாமையால் வாடின. அதனால் மனம் வருந்தினான். ஒருநாள் நாரத முனிவர் அவனிடத்தில் போனார். அவருக்குத் தன்னுடைய குறையை விண்ணப்பித்தான்.

"நீ விநாயகக்கடவுளைப் பூசை செய். அகத்திய முனிவருடைய கமண்டலத்தில் பொன்னிநதி இருக்கிறது. விநாயகர் அந்த நதியை இந்தச் சோலையில் விடுவார்" என்று நாரதமுனிவர் சொன்னார்.

இந்திரன் விநாயகரைப் பூசித்தான். அவர் வந்தருளினார். இந்திரன் வணங்கி, "சுவாமீ! அகத்திய முனிவருடைய கமண்டலத்தில் இருக்கும் நதியைத் தந்தருளவேண்டும்" என்று வேண்டுதல் செய்தான். விநாயகக்கடவுள் காகவடிவு கொண்டு சென்றார். கமண்டலத்தின் மேலிருந்து கவிழ்த்து விட்டார். அந்தநதி பூமியில்பாய்ந்து சென்றது.

அப்பொழுது விநாயகக் கடவுள் ஒரு சிறுவனைப்போலத் திரிந்தருளினார். அகத்திய முனிவர் கோபங்கொண்டார். அவரைக் குட்டுதற்குத் தொடர்ந்தார். கடவுள் அகப்படவில்லை. முனிவர் சரீரம் இளைத்து நின்றார். விநாயகக் கடவுள் தமது திரு உருவத்தைக் காட்டினார். முனிவர் தமது சிரசில் குட்டினார். விநாயகர் முனிவருக்குப் பலவரங்களைக் கொடுத்து மறைந்தருளினார்.

விநாயகக்கடவுள் கவிழ்த்தநதி சீகாழியில் பாய்ந்து சென்றது. திருநந்தன வனத்திற் புகுந்தது. பூமரங்கள் தழைத்துப் புஷ்பித்தன. இந்திரன் சிவபெருமானைப் பூசை செய்திருந்தான்.

"கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே."



## உ- கடவுள்.

கடவுள் ஒருவரே உலகத்துக்குக் கர்த்தா. அந்தக் கடவுள் சிவபெருமான். அவரே நம்மைப் படைத்தவர். நம்மைக் காப்பவரும் அவரே. நமக்கு வேண்டிய பொருள்கள் யாவற்றையும் தருபவரும் அவரே.

அவர் எங்கும் நிறைந்தவர். அவர் இல்லாத இடம் இல்லை. அவர் எல்லாம் அறிபவர். அவர் அறியாதது ஒன்றும் இல்லை. அவர் எல்லாம் வல்லவர். அவரால் இயலாதது ஒன்றும் இல்லை. அவர் என்றும் உள்ளவர். அவர் பிறத்தலும் இல்லை. இறத்தலும் இல்லை.

உமாதேவியார் சிவபெருமானுடைய சத்தி. விநாயகக்கடவுள், வீரபத்திரக்கடவுள், வைரவக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள் என்னும் நால்வரும் சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் எனப்படுவர்.

நாம் ஒவ்வொருவரும் தினந்தோறும் கோயிலுக்குப்போய், கடவுளை வழிபடல் வேண்டும். கடவுளை வழிபடுவோர், அவருடைய கிருபையைப் பெற்று முத்தியின்பத்தைப் பெறுவார்கள்.

"ஆலயந் தொழுவது சாலவு நன்று"
"வையந் தோறுந் தெய்வந் தொழு"

---

## ரு. சிவபெருமான் யானைத்தோலைப் போர்த்தது.

யானைவடிவத்தையுடைய கயாசுரன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பிரமதேவர் பலவரங்களைக் கொடுத்தார். அவன் அதனால் தேவர்களையும் முனிவர்களையும் மனிதர்களையும் வருத்தினான்.

முனிவர்கள் பயந்து காசிக்குப் போனார்கள். அவன் அவர்களைத் தொடர்ந்து காசியை அடைந்தான். முனிவர்கள் விசுவநாதருடைய கோயிலை அடைந்து, அவரிடத்தில் அடைக்

க்லம் புகுந்தார்கள். கயாசுரன் அவர்களைக் கொல்லும்படி கோபத்தோடு சென்றான்.

சிவபெருமான் அவனுடைய தோலை உரித்து, தமது திருமேனியிலே போர்த்தருளினார். கயாசுரன் இறந்ததினால் எல்லோரும் சந்தோஷம் கொண்டார்கள்.

---

## ச. சிவபெருமான் கங்கையை அணிந்தது.

ஒருநாள் உமாதேவியார் சிவபெருமானுடைய திருக்கண்களைத் தமது கையினாலே பொத்தினார். உடனே எவ்விடமும் ஒளி நீங்கி இருளாயது. சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணை விழித்தார். எங்கும் ஒளி உண்டாயது.

உமாதேவியார் பயந்து, சிவபெருமானது கண்களைப்பொத்திய இரண்டு கைகளையும் எடுத்தார். உமாதேவியாரது கைவிரல்களில் இருந்து வேர்வை உண்டாயது. அது பத்துக் கங்கைகளாய் உலகத்தை அழிக்கும்படி பாய்ந்தது.

அதனுல் உயிர்கள் துக்கப்பட்டன. தேவர்கள் சிவபெருமானை வணங்கினுர்கள், சிவபெருமான் கங்கையைத் தமது திருமுடியில் தரித்தருளினுர்.

---

## ரு- விட்டுணு சக்கரம் பெற்றது.

முற்காலத்திலே சலந்தரன் என்னும் ஒரு அவுணன் இருந்தான். சிவபெருமான் சக்கரப்படையால் அவனைக் கொன்றுர். விட்டுணு அந்தச்சக்கரத்தைச் சிவபெருமானிடம் பெற்றுக்கொள்ள விரும்பினுர்.

விரும்பிய விட்டுணு காஞ்சீபுரம்போனுர். அங்கே இருந்து ஒவ்வொரு நாளும் ஆயிரம் தாமரைப் பூக்களால் சிவபூசை செய்தார்.

ஒருநாள் ஒரு பூவைச் சிவபெருமான் மறைத்தருளினுர். விட்டுணு தமது கண்ணைப் பிடுங்கி, ஒருதாமரைப் பூவாகச் சாத்தினுர். சிவபெருமான் வெளிப்பட்டு, விட்டுணுவுக்குச் சக்கரத்தைக் கொடுத்தருளினுர். விட்டுணு சக்கரத்தைப் பெற்றுக்கொண்டு, தமது உலகத்தை அடைந்தார்.

"சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு"

---



## ௪. இரணியவன்மர்.

கௌடம் என்று ஒருதேசம் உண்டு. அங்கே ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். மூத்தவன் பெயர் சிங்கவன்மன். குட்டநோய் அவனை வருத்தியது. வைத்தியர்கள் மருந்து கொடுத்தார்கள். சுகப்படவில்லை.

இது கடவுளால் சுகப்படவேண்டும் என்று நினைத்தான். நினைத்து, சிதம்பரத்துக்குப் போனான். அங்கே வியாக்கிரபாத முனிவர் இருந்தார். அவரை வணங்கினான். அவர் அவனைச் சிவகங்கையில் ஸ்நாநம் பண்ணச் செய்தார். உடனே குட்டநோய் நீங்கியது. சரீரம் பொன்நிறமாயது. இரணியவன்மர் என்று பெயரைப்பெற்றார்.

இரணியவன்மர் பலகாலம் நடராசரை வணங்கிக்கொண்டிருந்தார். சிவபெருமானுக்குக் கோயில் கட்டுவித்தார். பூசை திருவிழா முதலியவைகளைச் செய்வித்தார். அங்கேஇருந்து முத்தி அடைந்தார்.

---



## எ- கிருஷ்ணர் வெண்ணெய் திருடியது.

யசோதை என்பவளுக்குப் புத்திரனாய் வளர்ந்த கிருஷ்ணர் இடையர்களுடைய வீடுகளுட் செல்லுவார். அவர்கள் கறந்துவைத்த பாலை ஊற்றிவிடுவார். பால் கறப்பதற்குமுன் கன்றுகளை அவிழ்த்துவிடுவார். உறியில் இருக்கும் வெண்ணெய்ப்பாத்திரங்களை உடைப்பார். வெண்ணெயை உண்டுவிடுவார். எஞ்சிய வெண்ணெயைப் பூனைகளுக்கும் குரங்குகளுக்கும் கொடுப்பார்.

ஒரு இடைச்சி வீட்டில் வெண்ணெய் திருடிக்கொண்டு இருந்தார். அவள் அவரைப் பிடித்துத் தாயிடம் கொண்டுவந்தாள். தான் பிடித்திருப்பது தன் மகனுக இருக்கக்கண்டு வெட்கம் அடைந்தாள். கிருஷ்ணர் ஒன்றும் அறியாதவர்போல் விளையாடிக்கொண்டு இருந்தார்.

தாய் அவரை எடுத்துப் பால்கொடுத்துக்கொண்டு இருந்தாள். அடுப்பில் வைத்திருந்த பால் பொங்கிவழிந்தது. யசோதை அவரைக் கீழே விட்டாள். அடுப்பருகிற் போனுள். கிருஷ்ணருக்குக் கோபம்உண்டாயது. அவர் தமது கையால் தயிர்ப்பானையை உடைத்தார். தயிர் பெருகிச்சென்றது. கிருஷ்ணர் ஒளித்தார்.

தயிர்ப்பானை உடைந்திருப்பதை யசோதை கண்டாள். கிருஷ்ணரைத் தேடினுள். அவர் ஒரு மூலையில் மறைந்திருப்பதைக் கண்டாள். அவரைப்பிடித்து ஒரு உரலுடன் கட்டினுள். கிருஷ்ணர் கண்களைக்கசக்கி அழுதார். ஒருவரும் அவிழ்த்து விடவில்லை. உரலையும் இழுத்துக் கொண்டு தவழ்ந்துசென்றுர்.

சிறிதுநேரம் சென்றபின் தாயும் கோபம்

நீங்கி, அவரை அவிழ்த்துவிட்டாள். கிருஷ்ணர் துள்ளிக்குதித்து, சிரித்து விளையாடினர்.

## அ. கிருஷ்ணர் கன்றால் விளவு எறிந்தது.

ஒரு நாள் கிருஷ்ணரும் இடையர்களும் பசுக்களையும் கன்றுகளையும் மேய்த்துக்கொண்டு நின்றார்கள். அப்பொழுது கஞ்சன் என்பவன் கிருஷ்ணரைக் கொல்லுமாறு ஒரு அசுரனை அனுப்பினன்.

அவன் ஒரு பசுக்கன்றுவடிவாகி, மேய்ந்துகொண்டு நின்ற பசுக்களோடு சேர்ந்து நின்றான். அதைக் கிருஷ்ணர் கண்டார். தமையனுகிய பலராமருக்குக் காட்டினர்.

பின்பு அம்மாயக்கன்றின் கால்களைப் பிடித்துத் தூக்கிச் சுழற்றினர். பக்கத்தில்நின்ற விளாமரத்தின்மேல் எறிந்தார். அம்மரத்தில் இருந்த விளாங்காய்கள் உதிர்ந்தன.

அப்பொழுது, கன்றுவடிவு கொண்டு வந்த அவுணன் சொந்தவடிவுடன் பூமியில் விழுந்து இறந்தான். இதனைக்கண்ட இடையர் கிருஷ்ணரைப் புகழ்ந்தார்கள்.

# கூ. கிருஷ்ணர் வஸ்திரம் கொடுத்தது.



இடைச்சியர்கள் ஒரு நாள் ஸ்நாநம் செய்வதற்கு ஆற்றுக்குப் போனார்கள். கிருஷ்ணரும் அங்கே போனார். பெண்கள் தங்கள் தங்கள் வஸ்திரங்களை உரிந்து, கரையில்வைத்துவிட்டு ஆற்றில் இறங்கினார்கள். நீரில் ஸ்நாநஞ்செய்து விளையாடிக்கொண்டு இருந்தார்கள்.

அப்பொழுது கிருஷ்ணர் அவர்களுக்குத் தெரியாதபடி கரையில்இருந்த வஸ்திரங்களை எடுத்தார். எடுத்துக்கொண்டு ஒரு மரத்தின்மேல் ஏறியிருந்தார்.

பெண்கள் வஸ்திரங்களைக் காணாதவர்களாய் வருந்தினார்கள். கிருஷ்ணர் கூத்தாடி, கையோடு கையை அடித்துச் சிரித்தார். கிருஷ்ணர் ஆடைகளுடன் மரத்தில் இருப்பதைப் பெண்கள் கண்டார்கள். அவர்கள் வஸ்திரங்களைத்தருப்படி அவரைக்கேட்டார்கள்.

கிருஷ்ணர் அவர்களைநோக்கி "பெண்களே வெளியேவாருங்கள்; நீங்கள் வஸ்திரம் இல்லாமல் நீரில் இறங்கலாமா? இதைஉங்கள் சுற்றத்தார் அறிந்தால் அவர்கள் உங்களை என்ன நினைப்பார்கள். விரைவில் உங்கள் வீடுகளுக்குப் போங்கள்" என்று சொல்லிச்சிரித்தார்.

இடைச்சியர்கள் கிருஷ்ணரைப் புகழ்ந்து வணங்கினார்கள். உடனே கிருஷ்ணர் அவர்களது ஆடைகளைக் கொடுத்தார். அவர்கள் தங்கள் தங்கள் வீடுகளை அடைந்தார்கள்.

---

## ௧௦. திருஞானசம்பந்தர் ஆண்பனைகளைப் பெண்பனைகள் ஆக்கியது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவோத்தூர் என்னும் தலத்துக்குச் சென்றார். அங்கேசுவாமியைத் தரிசித்துக்கொண்டு இருந்

தார். அந்தத்தலத்தில் ஒரு சிவனடியார் இருந்தார். அவர் சிவபெருமானுக்குப் பனைகள் உண்டாக்கினர். அவைகளுள் பெண்பனைகள் ஒன்றும்இல்லை. எல்லாம் ஆண்பனைகளாகவே வளர்ந்தன.

அந்த அடியவர் நாயனரை வணங்கி, "அடியேன் ஆக்குகின்ற பனைகள் எல்லாம் ஆண்பனைகளாய், காயாதிருக்கின்றன. சமணர்கள் அதுகண்டு நீர் உண்டாக்கும் ஆண்பனைகளையெல்லாம் காய்க்கச்செய்தல் கூடுமோஎன்று சிரித்துச் சொன்னர்கள். தேவரீர் அருள்செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

நாயனர் கோயிலிற்சென்று தேவாரத் திருப்பதிகம் பாடினர். அதனல் ஆண்பனைகள் எல்லாம் குரும்பைக்குலைகளையுடைய பெண்பனைகள் ஆயின.

---

## கக- திருக்குறிப்புத்தொண்ட நாயனர்.

காஞ்சிபுரத்திலே, ஒருபெரியவர் இருந்தார். அவர் வண்ணர்குலத்திற் பிறந்தவர். அவர்பெயர் திருக்குறிப்புத்தொண்டர். அவர் சிவனடியார்களுக்கு வஸ்திரம் தோய்த்துக் கொடுப்பவர்.

ஒரு நாள் சிவபெருமான் சிவனடியார் வேடங்கொண்டு அவரிடத்தில் போனார். சிவனடியார் ஒரு கந்தைவஸ்திரம் உடுத்திருந்தார். அது அழுக்காய்இருந்தது. நாயனார் அவரை வணங்கி, "உந்தக்கந்தையைத் தாரும், வெள்ளையாக்கித்தருகிறேன்" என்றார்.

சிவனடியார் "குளிர்மிகுதியாயிருக்கிறது; இந்தக்கந்தையைக் கைவிடக்கூடாது" என்றார்.

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் "அஸ்தமயனத்துக்குமுன் கொண்டுவந்து தருகிறேன்" என்றார். சிவனடியார் அக்கந்தையை அவர்கையிற் கொடுத்தார்.

நாயனார் அதை ஒரு குளத்துக்குக் கொண்டு போனார். முன்சிறிது அழுக்கைப் போக்கினார். வெள்ளாவியில்வைத்தார். பின் வெளுக்கத்தொடங்கினார். சிவபெருமானுடைய அருளால் மழை பெய்தது. திருக்குறிப்புத் தொண்டர் கவலைகொண்டார். விரைவில் மழை விடும் என்று அங்கே நின்றார். அதுவிடவில்லை. இராக்காலம்வந்தது.

திருக்குறிப்புத்தொண்டர் குளிரில் நடுங்குகின்ற அடியாருக்குச் செய்ய விரும்பிய பணிவிடை தவறிவிட்டது என்று துக்கித்தார். துக்கித்து, சீலை அடிக்கும் கல்லின்மேல்

த்மத்து தலையை மோதினர். உடனே சிவபெருமானுடைய திருக்கரம் தோன்றியது. அது அவரைப்பிடித்துக் கொண்டது; மழை நீங்கியது. சிவபெருமான் அவருக்குக் காட்சிகொடுத்தருளினர்.

---

## ௩௨. கணநாத நாயனர்.

சீகாழியிலே, கணநாத நாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பிராமணர். அவர் சிவபெருமானுக்கு எப்பொழுதும் பணிவிடை செய்பவர். பலர் அவரை விரும்பிவந்து சேருவார்கள்.

திருக்கோயில்களுக்கு நந்தனவனம் வைக்கச் சிலரைப் பழக்குவார். பூக்கொய்யச் சிலரைப் பழக்குவார். சிலரைத் திருமாலை கட்டப்பழக்குவார். சிலரைத் திருவலகிடப் பழக்குவார். சிலரைத் திருமெழுக்கிடப் பழக்குவார். சிலரைத்திருவிளக்கேற்றப் பழக்குவார். சிலரைத் தேவாரம் முதலிய திருமுறைகளை எழுதப் பழக்குவார். சிலரை வாசிக்கப் பழக்குவார். அவர்களைச் சிவனடியார்களாக்குவார்.

அவர் திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரைத் தினமும் பூசிப்பவர். இந்தப் புண்ணியத்தினால் திருக்கைலாசத்தை அடைந்தார்.

---

## கஙு- கலியநாயனார்.

திருவொற்றி ஊரிலே, கலியநாயனார் என்பவர் இருந்தார். அந்த ஊரில் ஒரு சிவன் கோயில் உண்டு. அங்கே, அவர் ஒவ்வொரு நாளும் விளக்கேற்றிவந்தார். சிவபெருமான் அவருடைய அன்பைப் பிறருக்கு அறிவிக்க விரும்பினார். அவரை வறியவராக்கினார். அவர் வறுமைஅடைந்தும் தமதுதொண்டை வழுவாது செய்தார். எண்ணெய் ஆட்டும் இடங்களுக்குப்போவார். அங்கேதொழில் செய்வார். தமக்குக்கிடைத்த கூலிப்பணத்துக்கு எண்ணெய் வாங்குவார். திருவிளக்கேற்றுவார்.

பின்பு தொழில்செய்ய இடமும் கிடைக்கவில்லை. ஒரு நாள் கோயிலுக்குப்போனார். விளக்கேற்றும் நேரம் வந்தது. எண்ணெய்க்குப் பதிலாக, 'தமது இரத்தத்தை நிறைக்க நினைத்தார். ஆயுதத்தினாலே தமது கழுத்தை அரிந்தார்.

சிவபெருமான் நேராகவந்தார். அவருடைய கையைப்பிடித்தார். அவர் ஊறு நீங்கினர். சிவபெருமான் அவரைத் தமது திருவடிகளிலே சேர்த்தருளினர்.

---

## கச- காரிநாயனர்.

திருக்கடவூரிலே, காரிநாயனர் என்பார் ஒருவர் இருந்தார். அவர் தமிழ்ப்பாஷையில் வல்லவர். தப்பெயரினலே ஒரு தமிழ்நூல் பாடினர். தமிழ் அரசர்களிடத்திலே போவார். அதற்கு விளக்கமாகப் பொருள் சொல்வார். அவர்கள் மனம் மகிழுவார்கள். திரவியங்களைக் கொடுப்பார்கள்.

காரிநாயனர் அந்தத் திரவியங்களைக் கொண்டு, பல சிவாலயங்களைக் கட்டுவித்தார். சிவனடியார்களுக்கும் கொடுத்தார். உலகமெங்கும் அவருடைய புகழ் பரவியது. அவர் திருக்கைலாசமலையை அடைந்தார்.

---

## ௧௫- துருவன்.

உத்தானபாதன் ஒரு அரசன். அவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தார்கள். இளைய மனைவிக்கு ஒரு பிள்ளைபிறந்தது. அவன் பெயர் துருவன். அவன் தகப்பனுடைய மடியில் இருந்தான். அவனுடைய பெரியதாய் அதற்குக் கோபித்தாள். அவனைக் கையினலே இழுத்துவிட்டாள். தன் மகனை அரசனது மடியிலே இருத்தினள்.

துருவன் கண்ணைப்பிசைந்து அழுது அடிக்கடி வெப்பினன். அரசன் அவனைப் பார்க்கவில்லை. புத்திரன் இதனைத் தன் தாய்க்குச் சொன்னன். அவள் மகனைஎடுத்து அணைத்துத் தனது மடியில் வைத்துக்கொண்டு "நீ சிவபெருமானைப் பூசைசெய்யக் கடவாய்; அவர் உனக்குக் கிருபைசெய்வார்" என்றுள்.

துருவன் காசிக்குப்போய்ச், சிவபிரானைப் பூசைசெய்தான். சிவபெருமான் அவனுக்கு மேலான ஒரு உலகத்தைக் கொடுத்தார். அவன் அந்த உலகத்தில் இருந்து அதிகாரத்தைச் செலுத்துகின்ருன்.

"சான்ருே ரென்கை யின்ருேட் கழகு."

# கசு. அரிச்சந்திரன்.

இந்திரன் தன்சபையோர்களை நோக்கி, "பூவுலகத்திலே, பொய் சொல்லாதவர் உண்டோ" என்று கேட்டான். அங்கே இருந்த வசிட்டர் "அரிச்சந்திரன் சத்தியம் தவறான்" என்று கூறினர்.

இதனைக்கேட்ட விசுவாமித்திரர் "அரிச்சந்திரன் பொய்யன்; நான் இதனை உண்மைப் படுத்துகிறேன்; யான் அப்படிச் செய்யாதுவிட்டால் எனதுதவத்தில் பாதியை இழந்துவிடுகிறேன்" என்றார்.

பின்பு அரிச்சந்திரனைப் பொய் சொல்லும்படி, கஷ்டப்படுத்தினர். அதனால் அவன் தனது நாட்டை இழந்தான். மனைவிமக்களை விற்றான். தானும் சுடுகாட்டைக் காத்தான். ஆயினும், அவன் பொய்பேசவில்லை.

சிவபெருமான் உமாதேவியாருடனும், கந்தசுவாமியுடனும் தோன்றி, அவனுக்குக் கிருபை செய்தார்.

விசுவாமித்திரர் தோல்வி அடைந்தார். தமது தவத்தில் பாதி இழந்தார்.

# கஎ- பட்டணத்துப்பிள்ளையார்.

காவிரிப்பூம் பட்டணத்திலே, சிவநேசர் என்னும் வைசியர் ஒருவர் இருந்தார். அவர் மனைவி பெயர் ஞானகலை அம்மை. அவ்விருவருக்கும் உலகம் உய்யும்படி ஒரு புத்திரர் பிறந்தார். அவருக்குத் திருவெண்காடர் என்றும் பட்டணத்துப்பிள்ளையார் என்றும் பெயர் உண்டு.

பட்டணத்துப்பிள்ளையார் சிவபெருமானது திருவருளைப் பெற்றவர். சிவபெருமானை ஒருகாலமும் மறவாதவர். அவர்மீது பலபாடல்களைப்பாடியவர்.

பட்டணத்துப்பிள்ளையாருடைய தாயாராகிய ஞானகலை அம்மை மூப்புவந்து இறந்தார். சுற்றத்தார்கள் பிணத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோனார்கள். விறகை அடுக்கினார்கள். அதன்மேல் பிணத்தைவைத்து நெருப்புமூட்டினார்கள்.

திருவெண்காடர் இதனைக்கண்டு, விறகுகளை எடுத்து எறிந்தார். தாயாரது பிணத்தைத் தமது மடியின்மேல் வைத்து அழுதார்.

பின்பு வாழைத்தண்டுகளை அடுக்கி, அதன்மீது பிணத்தை வைத்தார். சிலபாட்டுகளைப் பாடியருளினர். அவர் அடுக்கிய வாழைத்தண்டுகள் உடனே நெருப்புப்பற்றி எரிந்தன. பிணமும் வெந்து சாம்பலாயிற்று. திருவெண்காடர் துறவியாய் இருந்தும் தாய்க்குச்செய்ய வேண்டிய தொண்டைச் செய்து நிறைவேற்றினர். இன்னும் பல அற்புதங்களைச் செய்து முத்தி அடைந்தார்.

---

## கஅ- நளமகாராசன்.

கிருதயுகத்திலே, நளன் என்னும் பெயரை உடைய அரசன் இருந்தான். அவன் நிடத நாட்டை ஆண்டுவந்தான். அவன் நீதியுள்ளவன். எல்லா உலகத்தாராலும் விரும்பப்பட்டவன். போரில் வீரன்.

புட்கரன் என்பவன் நளனோடு சூதாடும்படி போனன். நளமகாராசன் அதற்கு உடன்பட்டான். அவனுடைய மந்திரிமார்கள் சூதாடுதல் கூடாதுஎன்று புத்தி சொன்னர்கள். நளன் அதைக்கேட்கவில்லை.

நளனும் புட்கரனும் சூதாடினார்கள். பந்தையம் வைக்கப்பட்டது. முதலில் நளன் வென்றான். பின்பு புட்கரன் வென்றான். சூதிலே தோல்வி அடைந்த நளன் அரசாட்சியை இழந்தான். ஆடை ஆபரணங்களையும் இழந்தான். தனது பிள்ளைகளை மாமன் வீட்டுக்கு அனுப்பினான். தன் மனைவியோடு காட்டை அடைந்தான்.

அங்கே அவன் பாம்பினாற் கடிக்கப்பட்டுத் துக்கத்தை அடைந்தான். இருதுபன்னன் என்னும் அரசனுக்குத் தேர்செலுத்துபவனும் ஆனான். இப்படிப்பல துன்பங்களை அடைந்தும், சிவபெருமானை மறவாது தியானித்து வந்தான்.

ஒரு நாள் சிவபெருமான் அந்த அரசனுடைய கனவிலே தோன்றினார். அவனுக்கு அருள்செய்து மறைந்தார். நளமகாராசன் அக்கடவுளுடைய கிருபையினாலே தனது மனைவி மக்களோடு சேர்ந்திருந்தான். முன்போலத் தனது நாட்டையும் அரசாட்சி செய்தான்.

"சூதும் வாதும் வேதனை செய்யும்"

## ௧௬- தமயந்தி.

நளன் சூதாடி நாட்டை இழந்தான். அவனுடைய மனைவிபெயர் தமயந்தி. நளன் காட்டு மார்க்கமாகப் போனான். தமயந்தி அவன் பின்னுக்கப் போனாள். அவர்கள் ஒருவரை ஒருவர் பிரியவேண்டி வந்தது. தயயந்தி துக்கப்பட்டு, தனிமையாகத் தகப்பன் வீட்டுக்குப் போனாள். தகப்பன் பெயர் வீமராசன்.

ஒருவேடன் தமயந்தியைக் கண்டான். அவள் தனித்து வருவதை வேடன் அறிந்தான். அவன் ஒரு துட்டன். கெட்ட எண்ணங்கொண்டு அதை அவளுக்குச் சொன்னான்; அவள்உடன்படவில்லை. அவன் அவளை அவமானம் செய்யத் தொடங்கினான். அவள் அனேகம் புத்திகளைச் சொன்னாள். வேடன் அவற்றைக் கேட்கவில்லை.

தமயந்தி கற்புடைய பெண். அதை வேடன் அறிந்திலன். அவள் கோபங் கொண்டாள். உடனே வேடன் எரிந்து சாம்பரானான். தமயந்தி தனது தகப்பன் வீட்டை அடைந்தாள்.

பெண்களுக்கு ஆபரணம் கற்பு. கடவுள் அவர்களுக்குத் துணையாய் இருப்பர்.

"காவருனே பாவையர்க் கழகு".

## உ0- தீபாவளி.

முற்காலத்திலே ஒரு அவுணன் இருந்தான். அவன்பெயர் நரகாசுரன். அவன் ஒரு துட்டன். அவன் உயிர்களை வருத்தினன். விட்டுணு அவனைக் கொன்றார். அவனுக்கு நல்லறிவு வந்தது. இறக்கும் பொழுது இவ்விதம் கேட்டுக் கொண்டான்.

"இத்தினம் உலகத்துக்கு நன்மையும் சந்தோஷமும் கொடுக்கும்படி இருக்க வேண்டும். எங்கும் அதிகமாகத் தீபம் ஏற்றவேண்டும். அதிகாலையில் எண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய்தல் வேண்டும். கோடி வஸ்திரம் உடுத்தல் வேண்டும்" என்றான். விட்டுணு அவனுக்கு அருள் செய்தார்.

ஐப்பசி மாதத்தில் தீபாவளிக் கொண்டாட்டம் இப்பொழுதும் நடைபெற்று வருகின்றது.

## உக- துராசாரன் முத்தியடைந்தது.

ஒரு பிராமணன் இருந்தான். அவன் பெயர் துராசாரன். அவன் ஒழுக்கம் அற்பமேனும் இல்லாதவன். துட்டரோடு சிநேகம் செய்பவன். கடவுளிடத்து அன்பு அற்றவன்.

அவன் தன்னுடைய ஒழுக்கத்தை விட்டதனால் அவனை ஒரு வேதாளம் பிடித்து வருத்தியது. அவன் காடுகளிலும் பலதேசங்களிலும் அலைந்து திரிந்தான். திரியுங் காலத்தில் ஒரு

நாள் தனுஷ்கோடி தீர்த்தத்தை அடைந்தான். வேதாளம் அவனை முதுகிலே பிடித்து அந்தத் தீர்த்தத்தில் அமிழ்த்தியது. அவன் அதில் முழுகி எழுந்தான்.

அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் முழுகியமையால், சுத்தன் ஆயினான். வேதாளம் அவனை நீங்கிவிட்டது.

அவன் அங்கே இருந்த ஒரு முனிவரைக்கண்டு வணங்கினான். அவருடைய கிருபையைப் பெற்றான். பற்பல தருமங்களைச் செய்து முத்தி அடைந்தான்.

"ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்."

---

## உஉ. குருமொழி கேளாமை.

திரிசங்கு என்னும் ஒரு அரசன் இருந்தான். அவன் மனித சரீரத்தோடு சுவர்க்கலோகத்துக்குப்போக விரும்பினான். அந்தவிருப்பத்தைத் தனது குலகுருவுக்குச் சொன்னான். அவர் "அப்படிச் செய்யமுடியாது" என்றார். அவர் பெயர் வசிட்டமுனிவர்.

விசுவாமித்திரர் என்னும் ஒரு முனிவர் இருந்தார். அவர் வசிட்டமுனிவருடையபகைவர். திரிசங்கு விசுவாமித்திரரிடம் போனான். தனது எண்ணத்தை அவருக்குச்சொன்னான். முனிவர் திரிசங்குவைச் சுவர்க்கம்போகும்படி செய்தார். சுவர்க்கத்துக்கு அரசனாகிய இந்திரன் அவனைத்தள்ளிவிட்டான். திரிசங்கு புலம்பிக் கொண்டு நிலத்தில் விழுந்தான்.

முனிவர் அந்தரத்தில் ஒரு சுவர்க்கம் உண்டாக்கி, அவனை அதில் நிறுத்தினர். அவன் எல்லாராலும் இகழப்பட்டான். தான் அனுபவித்த சுகத்தையும் இழந்தான்.

"மொழிவது மறுக்கி னழிவது கருமம்."

## உரு. சுதன்மன்.

காசியிலே ஒரு பிராமணன் இருந்தான். அவன்பெயர் சுதன்மன். அவன் விட்டுணுவை நினைத்துத் தவஞ்செய்தான். விட்டுணுவந்தருளினர். "எனக்குக் கல்விச்செல்வத்தைத் தந்தருளவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தான். விட்டுணு அவனைப் பண்டிதனாகச்செய்து மறைந்தருளினர்.

சுதன்மன் கல்விச்செருக்குக் கொண்டான். முறையாகப் படித்த பண்டிதர்களை நிந்தித்தான். பண்டிதர்கள் மனவருத்தம் கொண்டார்கள்.

பிரமதேவர் ஒரு வயோதிகப் பிராமணராய், அவனிடப்போனர். "சுதன்மனே! நீ படித்த கல்விக்கேற்ற ஒழுக்கம் உன்னிடம் இல்லை" என்று சொன்னர்.

"வயோதிகனே! நீ நூல்களைப்படியாதவன். மூப்பினல் இப்படிச்சொன்னய்" என்றான். பிரமதேவர் நான்கு முகங்களுடன் வெளியாகி நின்றர். கோபங்கொண்டார். "நீ பெரியோர்கள்முன் கடுஞ்சொற்களைக் கூறினய்,

ஆகையால் ஊமையாவாய்'' என்றார். உடனே அவன் ஊமையானான்; மனம் வருந்தினான். பின்பு திருக்கேதாரத்துக்குப்போய்ச் சிவபெருமானை வணங்கினான்.

ஒரு நாள் அவன் ததீசிமுனிவரைக் கண்டு வணங்கினான் அவர்விபூதி கொடுத்தார் சுதன்மன் ஏற்று அணிந்தான். உடனே ஊமை நீங்கியது. பின்பும் முனிவரைக் கும்பிட்டுத் தனது ஊருக்குப் போனான்.

"வித்தை விரும்பு, வீடுபெறநில்"

## உச- அரசனும் மகனும் நரகம் அடைந்தது.

முற்காலத்திலே, ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு வசு என்னும் பெயருடைய ஒரு புத்திரன் இருந்தான். அவன் ஒரு சிவன் கோயிலிலே, மணலில் விளையாடிக்கொண்டு இருந்தான். அப்பொழுது ஒரு பொற்பணத்தைக்கண்டு எடுத்தான். எடுத்து அதைத்தந்தையிடம் கொடுத்தான். அவன் அதைப் பொக்கிஷத்தில்வைத்தான்.

கோயில் அதிகாரிகள் அரசனிடம் போனார்கள். அவர்கள் அவனைப்பார்த்து, "உம்முடைய மகன் கோயிலில் எடுத்த பணத்தைக் கோயிலுக்குக் கொடுத்து விடல்வேண்டும்'' என்றார்கள். அரசன் பணத்தைக்கொடுக்க மறுத்து விட்டான். அதிகாரிகள் திரும்பிப் போனார்கள்.

கோயிற்பொருளை எடுத்த பாபம் அரசனைப் பற்றியது. அன்றிரவு அவனுடைய மாளிகை நெருப்புப்பற்றி எரிந்தது. கள்வர்கள் பொருள்களைக் கவர்ந்தார்கள். அரசனும் மகனும் இறந்து வெகுகாலம் நரகத்துன்பத்தை அனுபவித்தார்கள்.

## உரு- பெரியோரை இகழ்தல் ஆகாது.

அங்கதேசத்திலே, கலிங்கன் என்பவன் இருந்தான். அவன் பல தருமங்களைச் செய்து கொண்டு இருந்தான். அவனிடத்தில் ஒருயோகீசுரர் போனார். கலிங்கன் அவரைக் கண்டவுடன் எழுந்து நமஸ்காரம் செய்யாது இருந்தான்.

யோகீசுரர் அவனைப்பார்த்துச் சிரித்தார். கலிங்கன் அவரை இகழ்ந்தான். யோகீசுரர் "நீ பசாசாவாய்" என்று சாபமிட்டனர். கலிங்கன் அவரை வணங்கி, "யான்செய்த குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தான்.

"நீ விருத்தாசலத்துக்குப் போவாய். அங்கே உரோமசமுனிவர் இருக்கின்றார். அவரைக் கண்டவுடன் இச்சாபம் நீங்கும்" என்றார். கலிங்கன் பசாசுவடிவம் ஆனான். அவன் இருக்க இடமும் இல்லாமல் அலைந்து திரிந்தான்.

ஒருநாள் விருத்தாசலத்தை அடைந்தான். அங்கே உரோமசமுனிவரைக் கண்டு வணங்கினான். உடனே பசாசு வடிவம் நீங்கி, மனித வடிவத்தைப் பெற்றான்.

முனிவர் அவனை நோக்கி "நீ இந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, சிவபெருமானை வணங்கு" என்றார். கலிங்கன் ஸ்நாநம் செய்து சிவபெருமானை வணங்கினான். சிவபெருமான் அவனுக்குக் கிருபை செய்தருளினார்.

"பெரியாரைத் துணைக்கொள்."

---

## உக- கதிர்காம யாத்திரை.

சற்புத்திரன் என்னும் பெயரையுடைய ஒரு செட்டி இருந்தான். அவன் சுப்பிரமணியக் கடவுளிடத்தில் அன்புள்ளவன். அவன் வெகு பிரயாசத்துடன் கதிர்காமயாத்திரை செய்து கொண்டு வழியிற் சென்றான்.

ஒருநாள் யானையொன்று வழியில் தடை செய்தது. அது துதிக்கையினால் அவனைத் தூக்கியது. அச் சற்புத்திரன் "கதிர்காமவேலனே! கதிர்காமவேலனே!" என்று சத்தமிட்டு அழைத்தான்.

சுப்பிர்மணியக்கடவுள் வேட்டுவவடிவங் கொண்டு சீக்கிரமாக வந்தார். தமது வேற்படையைச் செலுத்தி, அந்தயானையைக் கொன்றார். செட்டியை யானையினது கையினின்றும் விடுவித்தருளினார்.

சற்புத்திரன் கந்தசுவாமியை நினைத்துக்கொண்டு கதிர்காமம் போயினான். அங்கே மாணிக்ககங்கையில் ஸ்நாநம் செய்து, சுப்பிரமணியக் கடவுளை வணங்கினான்.

---

## ௨எ- ஆதிசேடன் விட்டுணுவுக்குச் சயனமானது.

ஆதிசேடன் நாகர்களுக்குத் தலைவன் அவன் பல சாத்திரங்களையும் அறிந்தவ ஆயினும் நூல்களை மறந்திருந்து கேட் வன்; ஆசிரியனை வணங்கிக்கொள்ளாதவன்.

கல்வியிலே தனக்கு நிகர் ஒருவரு இல்லை என்று செருக்குக் கொண்டான். ஒரு நா விட்டுணுவை வெல்ல நினைத்து அவரிட போனான். அகத்தியமுனிவரும் அங் போனார். முனிவர் ஆதிசேடனைப் பார்த் "இந்த விட்டுணு எல்லாராலும் மதிக்கத்த வர். இவரை நீ குருவாகக் கொள்ளுதி" எ ஞர். "நான் படிக்கவேண்டியவைகளையெல்ல படித்தறிந்தேன். இவர் எனக்கு உபதேசி வேண்டியது ஒன்றும் இல்லை" என்றான். அறிந்த வித்தைகள் எல்லாம் தேய்ந்துபோ கடவது. விட்டுணுவுக்குப் படுக்கையாகு என்று அகத்தியர் சொன்னார்.

ஆதிசேடன் முனிவரை வணங்கி "நா அறியாது சொல்லியவைகளைப் பொறுத்த ளுக" என்றான். "நீ விட்டுணுவுக்குப் படுக் யாகக்கிடக்குதி. அவர் கூறுகின்ற வித்தைக அறிகுதி. அப்பொழுது நல்லறிவு உண் கும். இச்சாபம் நீங்கும்" என்றுகூறி அ தியமுனிவர் போயினர். ஆதிசேடன் விட ணுவுக்குச் சயனமானான். "திருமாலுக் கடிமைசெ